**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 401/2022</u>**

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26–ம் செவ்வாய்கிழமை வா.சா.1

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | லட்சுமிநாதன் | தொழில் |
| த/பெ | ராமநாதன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** நானும் பிரதிவாதியும் உறவினர்கள் என்றால் சரிதான். சொத்தை மீண்டும் என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கரூர் வைஸ்யா வங்கி நிலக்கோட்டை கிளையில் வரவு செலவு செய்கிறேன் என்றால் சரிதான். மேலும் நிலக்கோட்டை சிட்டி யூனியன் வங்கியிலும் பணப்பரிவர்த்தனை செய்து வருகிறேன். மேற்படி சிட்டி யூனியன் வங்கியின் வங்கி கணக்கு புத்தகத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இரண்டு வங்கிகளிலும் கடன் வாங்குவது மற்றும் நகையை அடமானம் வைப்பது ஆகிய பரிவர்த்தனைகளை செய்வேன். கரூர் வைஸ்யா வங்கியில் தான் அதிக அளவில் கடன் பரிவர்த்தனை செய்துள்ளேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா இரண்டு அயிட்ட சொத்துகளும் காலி மனை இடங்கள் என்று சொன்னால் சரிதான்.

**2.** வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் அதை தெரிந்து தான் மேற்படி ஆவணங்களை எழுதிக் கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணங்களின் சரத்துகள் குறித்து எனக்கு ஆட்சேபனை எதுவும்

இல்லை என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு சொத்தை கிரையம் பெற்றம்போது அது அங்கீகரிக்கப்படாத மனையிடங்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்துக்களை நான் வியாபாரம் செய்வதற்காக தான் வாங்கினேன் என்று சொன்னால் சரிதான். 1–ம் அயிட்ட சொத்தை சொத்தை ரூபாய் 6 லட்சத்து 57 ஆயிரதிற்கும் 2 ம் அயிட்ட சொத்தை ரூபாய் 7 லட்சத்தி 80 ஆயிரத்திற்கும் கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பிரதிவாதி கிரையம் பெற்றதற்கு பிறகுதான் முறைப்படியாக டிடிசிபி அப்ரூவல் பெற்றார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தை 2021 ஆம் வருடம் வரை பார்த்துள்ளேன் அதற்குப் பிறகு பார்க்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2023 வருடம் தாவா சொத்தை போய் பார்த்தேன்.

3. தாவா சொத்தில் ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது. மேற்படி வீடு கட்டப்பட்டது தொடர்பாக நான் விசாரிக்கவில்லை. தாவா சொத்தைப் பொறுத்து வில்லங்கச் சான்று பெற்று பார்வையிட்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பிரதிவாதி விற்பனை செய்யப் போகிறார் என்று நான் அனுமானத்தில் குறிப்பிட்டேன் என்று சொன்னால் சரியில்ல ஒரு தரகர் என்னிடம் அதை குறித்துச் சொன்னார். மேற்படி சங்கதியை தற்போது தான் முதன் முதலாக கூறுகிறேன் என்றாலும் இதற்கு முன்பாக அது குறித்து கூறவில்லை என்று சொன்னால் சரிதான். கிரைய தேதியிலேயே தாவாசொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதியிடம் ஒப்படைத்து விட்டேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 க்கும் இடையில் ஒரு வாரம் கால இடைவெளி உள்ளது. வா.சா.ஆ.1 ன்படி கொடுக்கப்பட்ட ரூபாய் 6 லட்சத்திற்கான காசோலை ஒரு வாரம் கழித்து வசூலுக்கு போடும்படி பிரதிவாதி கேட்டுக் கொண்டதால் நான் வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை. அவர் உறவினர் என்பதாலும் வங்கிகளில் கடன் பெற்று தருவதாக சொன்னதாலும் வாசா.ஆ–2–ன்படி மீண்டும் அவருக்கு சொத்தைக் கிரையம் செய்தேன்.

4. உறவினர் என்பதால் எங்கள் இருவருக்கும் வரவு செலவு உள்ளது என்று சொன்னால் சரியல்ல வேறு எந்த வரவு செலவு இல்லை. வங்கியில் கடன் பெற்று ரொக்கமாக தருவதாக பிரதிவாதி கூறியதை நான் ஒப்புக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். அதனால்தான் நான் காசோலையை வசூலுக்காக வங்கியில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி காசோலையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அதை பிரதிவாதியே திரும்ப வாங்கிக் கொண்டார். அவர் 2019 ஆம் வருடம் ஜனவரி மாதம் மேற்கண்ட காசோலைகளை திரும்ப வாங்கிக் கொண்டார். சொத்தை திரும்ப தருவதாக கூறி காசோலைகளை திரும்ப பெற்றுக் கொண்டார். மேற்படி சங்கதிகளை என்னுடைய வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. கடந்த 10.12.2018 ஆம் தேதி மேற்படி இரண்டு காசோலைகளுக்கான தொகையான ரூபாய் 13 லட்சத்தை பிரதிவாதி என்னிடம் ரொக்கமாக திரும்ப கொடுத்துவிட்டு காசோலைகளை திரும்ப பெற்றுக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வங்கி மற்றும் தனிநபர்கள் கடன் நிலுவைத்தொகை இருப்பதால்தான் வங்கியில் மேற்படி காசோலையை வசூலுக்கு போட்டால் வங்கி மேற்படி தொகையை கடனுக்காக சரி செய்து விடும் என்றும் எனவே ரொக்கமாக கொடுக்கச் சொல்லி நான் கேட்டதால்தான் மேற்படி தொகை பிரதிவாதியால் எனக்கு ரொக்கமாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் அவ்வாறு கேட்கவில்லை. 13 லட்ச ரூபாய் எனக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்று தாராபுரம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்துள்ளேன். அவருக்கு புகார் கொடுத்ததற்கான ஆதரவு எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது.

6. போலீசார் மேற்படி தொகையை வசூல் செய்து கொடுக்கவில்லை அதன் பிறகு ஊர் பஞ்சாயத்தில் பேசினோம் பிரதிவாதி மேற்படி தாவா சொத்துக்கள் வங்கி கடனில் அடமானம் வைக்கப்பட்டிருப்பதால் அதை திருப்பித் தருவதாக

என்னிடம் சொன்னார். நான் பொய்யான தகவல்களை குறிப்பிடுகிறேன் என்றாலும் மேற்படி காசோலைகளை கொடுத்து விட்டு பிரதிவாதியிடம் தொகை பெற்றுக் கொண்டதால் தான் இன்றைய தேதி வரையில் அவர் மீது நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்தவழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பை எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியாது நான் பணத்தை திரும்ப வாங்கிக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளார் தாவா சொத்தை விற்றது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. தாவா சொத்தைப் பொறுத்து அவர் அப்ரூவல் பெற்ற விபரமும் வங்கியில் கடன் பெற்ற விபரமும் தனது தம்பிக்கு செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்த விவரமும், இம்ரான்கான் என்பவருக்கு பவர் எழுதிக் கொடுத்த விபரமும் தாவா சொத்துக்கள் விற்கப்பட்ட விபரமும் எனக்கு தெரியும் என்றாலும் மேற்படி சங்கதிகளை மறைத்து தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை மறைப்பதற்காக தான் வழக்குடன் நான் தாவா சொத்தின் வில்லங்கச் சான்றை இணைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. கிரையத்தொகை பெறாமல் என்னை ஏமாற்றி பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெற்றுவிட்டார் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எந்த ஒரு நபரும் நான்கு வருடங்களுக்கு மேலாக கிரைய தொகை பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்திருக்க மாட்டார் என்று சொன்னால் சரியல்ல. எதிர்வாதம் தாக்கல் செய்த பிறகு பிரதிவாதியின் தம்பி முருகேசனையோ அவரது பொது அதிகார முகவர் இம்ரான் கான் என்பவரையோ கிரயம் பெற்ற மூன்றாம் நபர்களையோ தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்க நான் முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் மேற்படி விபரங்கள் எனக்கு தெரியாது. கிரையப்பத்திரம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டவை என்றாலும் அது குறித்து எனக்கு தெரிய வரவில்லை என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால்

சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கிரைய ஆவணங்களை ரத்து செய்ய நான் எதுவும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் அது குறித்து தெரியாது. வழக்கு சொத்துக்கள் வழக்கு தாக்கல் செய்த தேதியில் பிரதிவாதி வசம் இல்லை என்றாலும் அவர் அதை விற்பனை செய்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

8. நான் உண்மையான விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்குக்கு வழக்கு மூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழகக காலவரையறை சட்டத்தின்படி பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 நானே ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு தற்போது அதை ரத்து செய்ய வேண்டும் என கோரியிருப்பது ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் பிரதிவாதியை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.08.29 08:25:43 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.